ஓம் ஆறுமுக அரங்கமகா தேசிகாய நம

**3. ஓங்காரக்குடிலில் ஆசான் இருக்கும்போது அவ்வப்போது அவர்களுக்கு வரக் கூடிய உத்தரவுகளுக்கு ஏற்ப அன்னதான பணிகள் செய்வதற்காக அதிகப்படியான தொண்டர்கள் இருக்க வேண்டிய நிலை இருந்தது. தற்போது நித்திய செயல்பாடுகள் செய்வதற்கு இவ்வளவு எண்ணிக்கையில் தொண்டர்கள் தேவையில்லை. இச்சூழ்நிலையை எவ்வாறு சமாளிப்பது என்ற வழிகாட்டலும், அறிவுரையும், ஆசியும் வேண்டுகிறோம்.**

**ஓங்காரக்குடிலாசான் தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிகர் அருட்சுவடி**

23.05.2024

1. ஆசான் அரங்கமகா ஞானியர்
அனுகூலம் கூடிய தொடர் ஆசி அறிவுரை விளக்கம்
அன்பர்கள் வினாவிற்கு ஐயம் தீர்க்கும் வண்ணம்
அரங்கமகா ஞானியரின் அருளாசி விளக்கம்
2. மாதவம் காத்து இந்த கலியுகத்தில்
மாதவசியாய் மகான் சுப்பிரமணியப் பெருமான் அருளாலே
பூதலத்தில் எந்தன் அவதாரம் நிகழ்த்தப்பட்டிருக்க
புண்ணிய பலத்தால் இன்று
4. ஆறுமுகப் பெருமானோடு யான் ஜோதியில் கலந்து
கலந்துமே என் அன்பர்களை வழிநடத்த
கருணை கொண்டு அருட்சுவடி வழியாக பலம் கூடிட
அரங்கமகா ஞானியரும் பழுதின்றி தொண்டர்களுக்கு
5. தொடர் ஆசி வழங்குவேன்
வழங்கவே ஓங்காரக்குடிலின் செயல்பாடுகளுக்கும் தர்மகாரியத்திற்கும்
அரங்கமகான் யான் இருந்து நடத்தும் காலம்
உத்தரவுக்கு தக்கவாறு அதிகப்படியான தொண்டர் படைகளும்
7. தொண்டுக்கு உண்டான சேவைகளுக்கும் உண்டான எண்ணிக்கை
அளவிலான தொண்டர்களை கூட்டி
சேவைகள் பெருகி இருந்ததாலே
இந்தவித காலம் நித்திய செயல்பாடுகளுக்கு
8. இவ்வளவு கூடுதலான அன்பர்கள்
படைகள் எண்ணிக்கை அதிகம்
அதிகமாக தெரிவதாலே அன்பர்கள்
வேண்டுகின்ற வண்ணம் இந்த சூழலை
9. அல்லது அன்பர்கட்கு கூடுதலாக
இருக்கக் கூடிய இந்த நிலையை

எவ்வாறு சமாளிப்பது இதற்குண்டான
உபாயம் என்ன என்று

10. அன்பர் பெருமக்கள் கேட்க
அரங்கன் யான் இதற்குண்டான
ஆசி விளக்கத்தை தர வருகின்றேன்
இன்பமுற என் படைகளெல்லாம்

11. எந்தனுக்கு பிறவித் தொடர்புள்ள
சேய்களப்பா இவர்கள்
நன்மை கருதி இவர்களெல்லாம்
ஓங்காரக் குடில் நோக்கி வந்து சேர்ந்துள்ளார்கள்

12. நாட்டிடுவேன் ஞான தேசிகன்
எக்காலமும் இவர்களை கைவிட மாட்டேன்
இவர்களெல்லாம் இன்புற இனி
பிறவாத பெரும்பேற்றுக்கு உண்டான

13. நன்மை கருதிய சேவைக்கு கலந்துள்ளார்கள்
நாட்டிட அன்னதனால் இவர்கள்
தொண்டெல்லாம் உயர்வானது
மகத்தானது அகஜோதியில் இவர்களுக்குள்ளும் கலந்து

14. அரங்கன் யான் அன்னவர்களை வழி நடத்துவேன்
ஆனபோதும் இதுகாலம் இருக்கின்ற எண்ணிக்கையில்
அன்பர்களை பல குழுக்களாக பிரித்து
அச்சமற விசேட காலம் விழாக் காலங்களில்

15. இவர்களை ஓங்காரக்குடிலின் மிகுந்த
தர்மகாலம் பயன்படுத்தும் படியும்
பிற வகையில் கிளைகளை சார்ந்தும்
அவரவர்கள் சுய விருப்ப வழி

16. சுய தொழிலில் பிற வகையில்
ஈடுபாட்டில் இருந்தால் அதன் வழி
இயக்கம் கொண்டு அன்னவர்களை
அன்பொடு வழிநடத்தி அவர்கள் விரும்பும் காலம்

17. அரங்கன் என் குடிலில்
ஆக்கமுடன் பணி செய்யவும்
அனுமதித்து வழிநடத்துவது நலமாகும்
நலமுற உப ஜீவனத்தில்

18. பிற தொழில் தொடர்பில் இருப்பவர்கட்கு
அதற்குண்டான வாய்ப்பை அதிகப்படுத்தி

குடில் தொண்டை தவிர
பிற தொண்டுக்கு ஏதுவான சூழல் இல்லாதவர்களை

19. குடில் தொண்டிலே தொடர்ந்து நியமித்து
அவர்கட்கு இசைவான வண்ணம்
என் ஆசியோடு வழிநடத்த
நிர்வாகிகளாக என்னால் உருவாக்கப்பட்ட

20. தொண்டர் பெருமக்கட்கு இது கட்டளையாக
அரங்கன் விடுக்கின்றேன்
அச்சம் கொள்ளா காலம் கடக்க கடக்க
அன்னதானத்தின் பணி அன்னதானத்தின் சேவை மிகுவாகும்

21. அப்பொழுதெல்லாம் அன்பர் படை மிகுந்து
இன்னும் உயர்வாக நிலை மாறும்
அன்னதனால் இது காலம்
பொருளாதார நிலை குறித்து

22. அச்சம் கொள்ளா அவரவர்களுக்கு
பகுதிபட பிற ஜீவன வரவு வருவாய்
குல மாந்தர்களை கனிவோடு வழிநடத்தி
சிலகாலம் பின்னே ஒன்று சேர்த்து

23. அன்னவர்களை வழிநடத்த
அரங்கன் என் அனுமதியும்
ஆசியும் பாதுகாப்பும் உண்டு உண்டு
அன்னதனால் இது காலம்

24. அன்பர்களிடை கடுமையாக ஏதும்
நிகழ்வு கொள்ளாமல் கனிவோடு நடத்தி
அவர்கள் விருப்பத்தை ஆய்வு செய்து
அரங்கன் யானே சொல்லும் செயலும்

25. ஆற்றலுமாக இருந்து அவர்கட்கு
வழிநடத்துவேன் அன்னதனால் நிர்வாகிகள்
அச்சம் கொள்ளா இந்த செயல்களில்
பொருளாதாரத்தின் நிலை கருதி

26. அவர்கட்கு உண்டான எண்ணிக்கையில்
செயல்பாடுகளில் குறைவு செய்ய
அரங்கர் என் அனுமதியும்
ஆசியும் உண்டு உண்டு

27. உயர்வுபட அரங்கன் யான்
ஒவ்வொருவர் எண்ணமும் நோக்கமும் அறிந்து

அவர்கட்கு உண்டான அனைத்து தேவைகளையும்
ஆற்றல்பட பூர்த்தி செய்வேன்

28. என் தொண்டர் பெருமக்கள்
எந்த சூழலில் எப்படி ஏங்கினாலும்
அவர்கட்கு எந்தன் பரிபூரணமான பாதுகாப்பும்
ஆசியும் உண்டு உண்டு அறிவுரை ஆசி விளக்கம் முற்றும் முற்றே.

–சுபம்–